# காடுகளை பாதுகாக்க விழிப்புணர்வு ஊர்வலம்



காடுகளை பாதுகாக்க வலியுறுத்தி, பள்ளி மாணவ மாணவியர், கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தினர்.

**கோவை, ஜன. 20–**

காடுகளை பாதுகாக்க வலியுறுத்தி, கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில், விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடந்தது.

காடுகள் விலங்குகளுக்கு மட்டுமல்ல; மனிதர்களுக்கும் அவசியம். காடுகள் இல்லையெனில், மனிதர்கள் இல்லை. கடந்த, 10 ஆண்டுகளில் மட்டும், வளர்ச்சி என்ற பெயரில் காடு அழிக்கப்பட்டு வருவதோடு, மனிதர்களின் சுயநலத்தால் ஆக்கிரமிக்கப்பட்டும் வருகிறது.

காடுகளை காப்பதன் அவசியத்தை, மக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக, 'இந்தியா கிரீண் அண்டு வைல்டு' அமைப்பு சார்பில், நாட்டின் பல்வேறு இடங்களில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

அதன் ஒரு பகுதியாக, 'ஹியூமன் அனிமல் சொசைட்டி' சார்பில், ரேஸ்கோர்ஸில் நடந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில், பள்ளி மாணவர்கள், இயற்கை ஆர்வலர்கள், பொது மக்கள் உள்ளிட்ட, 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். காடுகளை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பாதகைகளை அவர்கள் ஏந்திச் சென்றனர்.